# செந்தமிழ்

தொகுதி 78 டிசம்பர் 1984 பகுதி 4

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

1. சைவமும் வள்ளலாரும்
2. சீனாவைப் பற்றிய செய்திகள்
3. தண்டபாணி தேசிகர் வரலாறு
4. இலக்கியச் சிந்தனைகள்

மதுரைத் தமிழ்ச்சங்கம் – மதுரை-1

ஆசிரியர் என். எஸ். முத்துமலைச்சாமி பி.ஏ.பி.எல்.

# செந்தமிழ்

தொகுதி 78 டிசம்பர் 1984 பகுதி-4

உள்ளே


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | சைவமும் வள்ளலாரும் — பி ஆர். நாசிம்மன் | 151 |
| 2. | கவிஞன் பெற்ற நோபெல் பரிசு | 160 |
| 3. | சீனாவைப் பற்றிய செய்திகள் — அசாமி | 162 |
| 4. | தண்டபாணி தேசிகர் வரலாறு — பழநி அரங்கசாமி | 166 |
| 5. | தமிழக முதல்வரின் உடல்நலம் | 169 |
| 6. | அணில் உண்ணும் அழகு — திரையன் | 170 |
| 7. | இலக்கியச் சிந்தனைகள் | 171 |
| 8. | இந்து மதத்தின் இதயம் — எஸ். சந்தான கோபாலன் | 174 |
| 9 | அன்னை இந்திரா | 186 |
| 10. | அறுவை மருத்துவத்தில் ஓர் அரிய சாதனை | 187 |

# சைவமும் வள்ளலாரும்

டாக்டர். பி. ஆர். நரசிம்மன்
பழனி.

மிகப் பழமையான காலந்தொட்டு இந்துக்களின் எண்ணத்தையும் வாழ்வையும் உருவாக்கி வருவது அதன் ஆன்மீகக் கொள்கைகளேயாகும். இந்திய நாட்டின் பலவகைச் சிறப்புக்களில் ஆன்மீகத் துறையில் உலகிற்கு அது தொடர்ந்து வழிகாட்டியாக இருந்து வரும் சிறப்பு மிகப்பெரியதாகும். இந்து மதம் உலகியலுக்கு ஏற்ற முறையில், மக்கள் அன்றாட வாழ்வில் பின்பற்றத்தக்கவாறு ஆன்மீக வாழ்க்கை நெறியைப் புகட்டி வருகின்றது. உலகியல் மாற்றங்கள் நிகழ்காலங்களில் இந்த மண்ணில் மகான்கள் தோன்றிப் புதிய புதிய கொள்கைகளை அருளினர். அக்கொள்கைகளின் அடிப்படையில் மட்டும் மாற்றமில்லை. ''பரம் பொருள் ஒன்றே ; எல்லாம் அவன் செயலே'' என்பதும், 'வேத ஆகமங்களே அனைவருக்கும் வழிகாட்டி' என்பதும் அவற்றுள் முக்கியமானது ஆகும். இவ்வடிப்படையினை மையமாகக் கொண்ட இந்து மதம் பல உட்பிரிவுகள் கொண்டது. அவ்வுட்பிரிவுகளில் முக்கியமானவை சைவமும், வைணவமும், சாக்தமும் ஆகும். உட்பிரிவுகள் தனித்தனிச் சமயங்களாக இயங்கி வருகின்றன.

சைவசமயம் சிவனை முழுமுதற் பொருளாகக் கொண்டு விளங்கிவருவது. இது மிகவும் தொன்மையான சமயம். சைவம் என்பது ஒரு தனிக் கொள்கையன்று, பல கொள்கைகளையுடையது. ஆயினும் அவையனைத்தும் சிவமே பரம் பொருள் என்று சாற்றுகின்றன. சிவம் என்ற சொல்லிற்கு பொருள் 'தான் மங்களமாயிருந்து தன்னை அடையும் பொருள்களையும் மங்களமாக்கும்' என்பது. ஆகவே சைவம் என்பது மங்களத்தை அளிப்பது எனலாம். சைவத்தில் காணப்படும் பலவிதத் தத்துவக் கொள்கைகளில் மிகவும் வளர்ச்சியுற்று உயர்ந்து நிற்பது சைவசித்தாந்தமாகும். இச்சைவ சித்தாந்தக் கொள்கைகளையும், சென்ற நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த மகான் இராமலிங்க அடிகள் என்னும் வள்ளலார் அவர்களின் கருத்துக்களையும் ஒப்புநோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமயத் தத்துவங்களையோ அல்லது பிற தத்துவங்களையோ கருதுவதில் கீழை நாடுகளிலும் மேலை நாடுகளிலும் முறை

யொன்று பின்பற்றப்படுகின்றது. எந்தத் தத்துவமும் நான்கு நிலைகளில் கருதப்படும். அவை பிரமாணவியல், உட்பொருளியல், அறிவியல் அல்லது சாதனையியல், சமயச் சடங்கியல் என்பனவாகும். நாமும் அதன் நோக்கிலே சைவக் கருத்துக்களையும், வள்ளலாரின் கருத்துக்களையும் காண்போம்,

1) பிரமாணவியல்:- (Epistomology) பிரமாணவியல் என்பது அறிவு ஆராய்ச்சியியல் எனப்படும். இதில் எது உண்மையறிவு; இதனை எவ்வாறு அறிவது என்பன கருதப்படுகின்றன. சைவசித்தாந்தச் சமயத்தின் படி மிக உயர்ந்த உண்மையறிவு இறைவனைப், பற்றிய அறிவேயாகும். நம்மைச் சுற்றி இருக்கின்ற உலகினை அறிய காட்சியளவையும், கருதுதல் அளவையும் ஏற்றதாக இருக்க, இறையறிவைப் பெற அச்சமயத்தின் அடிப்படை நூல்களே வழியாகும். நூல்கள் தரும் அறிவை 'சப்தம்' என்று பிரமாணமாக அறிஞர் குறிப்பிடுகின்றனர். சைவசமயம் கூறுவது போன்றே, இறையறிவை உயர்ந்த அறிவென்று கொள்வதுடன் அவ்வறிவைப் பெற நூல்களை நாடவேண்டும் என்று வள்ளலாரும் கூறுகிறார். வேதங்கள், ஆகமங்கள், பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் ஆகியனவே சைவ சமயத்தையும், சிவனையும் அறிவதற்கேற்ற அடிப்படை நூல்களாகக்கருதப்படுகின்றன. வள்ளலாரும் இக்கருத்திற்கு முரண் பட்டவர் அல்லர். மேலும் அவருடைய அருளியல் செயல்களான அருட்பாவும் இறையறிவைப் பெறப் பயன்படுவதாகும். இக்கருத்தினை 'வேதமோ டாகமும் மெய்யாம் இறையன் நூல்' என்ற திரு மூலரின் திருவாக்கினாலும், 'ஆகம முடிமேல் ஆரணமுடிமேல் ஆக நின்று ஓங்கிய அருட்பெருஞ் சோதி' என்ற வள்ளலாரின் வாக்கினாலும் நாம் உணர்கிறோம் 'யாதொரு தெய்வம் கண்டீர், அத்தெய்வமாகி அங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்' என்ற சித்தாந்த சாத்திரத்திற்கு இலக்கியமே அருட்பாவாகும். தவிர வள்ளலாரின் அருட்பாவும், திருமூலரின் திருமந்திரம், சமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் தேவார திருவாசகங்களின் அடிகள் பலவும், கருத்துக்கள் பலவும் அப்படியே பயிலப்பட்டு வந்துள்ளதைப் பார்க்கில் வள்ளலாரின் சமயமாகிய 'சன்மார்க்கம்' சற்றேனும் சைவசமயத்திற்கு வேறுபட்டதல்ல் என்பதை உணரலாம்,

தோன். மேதகு காலில் ஊக்கம் கொண்டோன், நிழல் திகழ் நீரில் இன்சுவை வைத்தோன்! வெளிப்பட மண்ணில் திண்மை வைத்தோன். எனவும் இறைவன் எல்லாவற்றிலும் நிறைந்து காணப்படுதலைக் கூறுகிறார். கடவுளே எல்லாம்; ஆனால் எல்லாம் கடவுள் அல்ல. இதே கருத்தினை வள்ளலார், 'எல்லா ஜீவன்களும் இயற்கையுண்மை ஏகதேசங்களாகி கடவுள் இயற்கை விளக்கமாகிய அருளுக்கு இடமாக இருக்கின்றது', என்று கூறுகின்றார். இதனைத் தான் அவர், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' எனவும், 'ஒத்தாரும், உயர்ந்தாரும், தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகியல் நடத்த வேண்டும், எனவும் கூறுகிறார்.

இறைவனைக் குணங்களுடையவராகக் குறிப்பிடும் பொழுது சைவ சித்தாந்திகள் முக்கியமாக எட்டு குணங்களைக் குறிப்பிடுகின்றனர். அவை 'தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியிருத்தல், இயற்கையுணர் வினனாதல், முற்றுமுணர்தல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, என்பனவாம். இதனையே வள்ளுவப் பெருந்தகை, 'எண்குணத்தான், எனக் குறிக்கின்றார். இவையனைத்தையும் விட, இறைவனின் சிறந்த குணமாக 'அன்பைக் குறிப்பிடுகின்றனர். இறைவனின் சாரமே அன்பு தான். திருமூலர் தம் திருமந்திரத்தில் பின் வருமாறு கூறுகின்றார்.

அன்பும் சிவனும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

சைவசித்தாந்தி பெரிதும் விரும்பி மதிப்புக் கொடுப்பது அன்பெனும் குணமேயாகும். இதனை அருள் அல்லது கருணை எனவும் வழங்குகின்றனர். 'அருளில் பிறந்து, அருளில் வளர்ந்து, அருளில் கலந்து, அருளில் இருந்து அருளில் தோயும் அப்பெருமாள்' என வழங்குகின்றனர். சிவஞான சித்தியார்தம் நூலில் 'இறைவனது

உருவம் கருணை அவனது குணங்களும் கருணை, அவனுடைய திருக்கரம், திருவடி முதலிய அனைத்து அங்கங்ளும் கருணை என்று குறிப்பிடுகின்றார். அக்கருத்தினை வள்ளலார் கருணையும், சிவமே பொருள்', 'கருணையே வடிவமாகியும் காண்கின்றார். மேலும் தானே அருளானான் தானே பொருளானான், தானே எல்லாம் வல்லதானான் 'எனவும் 'அருளுண்டாம் ஈசற்கு அது சக்தியன்றே, அருளுமவனின்றியில்லை அருளின்றேல் அவனில்லை, எனவும் வழங்குகின்றார்.

இறைவன் குணங்களற்றவர், நிர்குணன் என்று குறிப்பிடுவதன் பொருள் அவர் மாயையின் முக்குணங்களான சத்வம், ராஜசம், தாமஸம் ஆகியவை இல்லாதவர் என்பதாம். அவர் நற்குணங்களின் வடிவம், தூய்மையானவர். எனவே தீய குணங்களும் அவற்றின் காரணியான மாயை அல்லது பிரகிருதியின் பகுதி அவரிடம் இல்லை என்பதாகும்.

உலகு உயிர் ஆகியவற்றின் தொடர்பில் இறைவனுக்கு ஐவகைக் குணங்கள் அல்லது தொழில்கள் உரியதாகச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. அவை ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. இவற்றை 'பஞ்ச கிருத்தியம், என்பர், முதல் மூன்று செயல்களை

ஒருவனு மேயுல கேழும் படைத்தான்
ஒருவனு மேயுல கேழும் அளித்தான்
ஒருவனு மேயுல கேழும் துடைத்தான் எனத்திருமூலரும்,

அனைத்துலகும் ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய்', முழுதும் படைப்போற் படைக்கும் பழையோன்' என மாணிக்க வாசகரும் கூறுகின்றார். இறைவன் இவ்வுலகைப்படைத்து, காத்து, அழிப்பது உயிர்களின் நன்மைக்கே ஊழ்வினைக் கோட்பாட்டின்படி உயிர்கள் தத்தம் வினைகளின் பயன்களை துய்க்க வேண்டியவை. அவைகள் உண்மையறிவு பெறின் வினைப்பயன்களை நுகர முடியாது. எனவே அவைகள் வினைப்பயன்களை துய்த்து முடிக்கும் காலம் வரை உண்மையறிவிலிருந்தும் உயிர்களை மறைத்தல் இறைவன் கடமையாகின்றது. இறுதியில் உயிர்களுக்கு உண்மையறிவை

யளித்து ஆட்கொள்பவனும் அவனே. தளைகளையும், பிறவியையும் நீக்குபவனும் அவனே இவற்றைச் சமயக் குரவர்கள், 'பிறவி யறுக்கும் பிரானார்', 'தளையாயின தவிரவ்வருள் தலைவன்', 'இறைவனை நாளும் ஏத்த இடும்பை போயின்பமாமே', 'என்றும் எந்தை பிரானிடை மருதனை நன்று கைதொழுவார் வினை நாசமே', 'பன்னிப் பனிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான், எனப் பலவாறு இயம்புகின்றனர். இக்கருத்துக்களை வள்ளலாரும் 'எல்லா அண்டங்களையும், எல்லா புவனங்களையும், எல்லாப் பொருள்களையும், எல்லா ஜீவன்களையும், எல்லா ஒழுக்கங்களையும், எல்லாப் பயன்களையும், தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட்பெருஞ் சக்தியால் தோன்றி விளங்கச்செய்கின்றார் இறைவன்' எனக் கூறுகின்றார். மேலும் 'சாவா நிலையிது தந்தனம்', உடலுறு பிணியால் உயிருடல் கெடாவகை அடலுறக் காத்த அருள்' என்பதினாலும் இறைவனின் மறைத்தல், அருளல் ஆகிய கடமை களைக் குறிக்கின்றார்.

இறுதியாக சைவசித்தாந்திகள் இறைவனை மூன்று நிலைகளில் கண்டு வணங்குகின்றனர். அவற்றை 'உருவும், அருவும், அருவுருவும் ஆகிப் பருவ வடிவம் பலவாய்' என்கின்றனர். அருவநிலை அல்லது உருவமற்ற நிலையில் சிவன் சத்சித்தானந்தமாக இருக் கின்றார் என்பர். அதாவது கடவுள் ஒருவரே சித்து (உண்மை). ஏனெனில் அவர் ஒருவரே தமது சொந்த உரிமையில் நிற்பவர். மற்றவை அவரைச் சார்ந்து நிற்பவை. அவர் எல்லாம் அறிந்தவர். எனவே அவர் ஒருவரே சித்து. அவரே ஆனந்தம். இறைவன் குறைவற்றவராதலால் பேறுகள் அனைத்திற்கும் அவரே வடிவமாக இருக்கின்றார். எனவே தான் அருவ நிலையில் இறைவனை சச்சித்தானந்தம் என்கின்றனர். இக்கருத்தினை வள்ளலாரும் ஏற்கின்றார். இறைவனை அகண்ட வெளியாகவும், கருணை அல்லது அன்பு வடிவமாகக் கொள்வதில் இரண்டாவது நிலையான அருவுருவமாகவும், அதாவது உருவமும், அருவமும் கலந்த நிலையில் இறைவனை இலிங்கமாகவும் வழிபடு கின்றனர். சைவசித்தாந்திகள் ஜோதியை அருவுருவ வழி பாட்டுக்குப் பொருளாய்க் கொள்கின்றார். சைவசித்தாந்திகளும் இறைவனைச் சோதி என்கின்றனர். மாணிக்கவாசகர், 'ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி', 'சோதியே சுடரே சூழ

லொளி விளக்கே' எனவும், அப்பர், 'சொற்றுணை வேதியன் சோதி வடிவானவன்', 'தேச விளக்கெலாம் ஆனாய்', திருவையாறகலாத செம்பொற்சோதி' எனவும், சம்பந்தர் 'ஆதியாய நான்முகனும் மாலும் அறிவறிய சோதியானே' எனவும் இறைவனை சோதியாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் சோதியை வழிபடும் தனிப்பொருளாகக் கொள்பவர் வள்ளலார். இவருக்கு இறைவன் அருளும் ஒளியுமான வன். எனவே இறைவனை அருட்பெருஞ்சோதியாக வழிபடு கின்றார். சைவக்குரவர் மூவர் அருள் விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே' என இறைவனைப் பாடுகின்றார்கள். 'அருட்பெருஞ்சோதி, அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை, அருட்பெருஞ்சோதி, என்பது வள்ளலாரின் தாரக மந்திரமாகும். இத் தொடரை வள்ளலார் தமது அருட்பெருஞ்சோதி அகவலில் பலபடி யாக எடுத்தாளுவதைக் காண்கிறோம். 'நமச்சிவாய' என்பது சைவ சமயத்தின் தாரக மந்திரமாகும்.

மூன்றாவது நிலையான உருவநிலையில் இறைவனை நடராஜப் பெருமானாக சைவசித்தாந்தமும் வள்ளலாரும் ஏற்கின் றனர். இது தவிர இறைவனின் போகருபமாக உமாமகேஸ்வர னும், கோரருபமாக காமாரிருபமும், யோகருபமாய் தெட்சிணா மூர்த்தியும் இருக்கின்றனர். இவையனைத்தையும் சைவ சித்தாந்திகள் வழிபடினும் முக்கியமாக தில்லை நடராஜ மூர்த்தியைத்தான் வழிபடுகின்றனர். இதனை சமயக் குரவரின் பாடல்களால் நாம் அறியலாம். 'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி நீராகி எல்லாமாய் விளங்கும் ஈசன் வானவெளியாக ஒளிரும் உண்மையை உணர்த்துவதில்லை. அம்பலம் என்பது வெளி, சித்து என்பது ஞானம், சிதம்பரம் என்பதும் ஞானவெளியினைக் குறிக்கும். இச்சிற்றம்பலத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் சைவக்குரவர் அளித்தனர் என்பதை அவர்கள் அருளிச் செயல்களில் முன்னும் பின்னும் 'திருச்சிற்றம் பலம்' என் வழங்குவதிலிருந்தே அறியலாம். வள்ளலாரும் தில்லைப் பெருமானை அம்பலத்தரசே! அருமருந்தே! ஆனந்தத்தேனே! அருள்விருந்தே! பொதுநடத்தரசே, என்றும், 'சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு, சீவர்கள் பாட்டெலாம் தெருப்பாட்டு,'

கூட்டை உடைத்து இதயத்தைப் பிடிக்கச்
சாக்காடு முந்தும் வேளை
அச்ச உணர்வோடு அலறிப்புடைத்து
இழையோடும் மூச்சினைக் கையிலே பிடிப்பினும்
மறுகணம் மூச்சுவிட மறந்து போனேன்.

இளைஞராக இருந்தபோது இவர் பத்திரிகையாளனாகப் பணி புரிந்தவர். செக் நாடு ஜெர்மானியர் வசம் இருந்தபோது கவிதை-களால் இவர் நாட்டுப்பற்றை வளர்த்தார். 1948 ஆம் ஆண்டு தமது நாடு பொது உடைமைவாதிகளின் கைப்பட்டபோது 'குணம் நாடிக் குற்றமும் நாடும் கொள்கை வீரராகத் திகழ்ந்தார். 1968-ஆம் ஆண்டு ரஷ்யாவின் ராணுவத்தலையீடு நிகழ்ந்த போது சீபர்ட் செக் நாட்டு எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்தார். கம்யூனிச அரசாங்கம் இவரது கருத்துக்குத் தடைபோட்டது. ஆனால் கவி-ஞரின் பேனா முனை எழுதும் பணிக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. அவரது கவிதைகள் நாடு முழுதும் மறைமுகமாகவே வெளியிடப்பட்டு மக்களால் விரும்பிப் படிக்கப்பட்டன. பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தடைசெய்து பார்த்த அரசாங்கம் கட்டுப்பாட்டைத் தளர்த்திக் கொண்டது. சுதந்திர உணர்வு படைத்த கவிஞரோ இன்று உலகம் புகழும் அளவிற்கு உயர்ந்து விட்டார். இந்திய நாட்டில் கவியரசர் தாகூருக்குப் பிறகு இலக்கியத்துக்கான நோபெல் பரிசு யாருக்கும் கிட்டவில்லை என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

— பொறுப்பாசிரியர்

பகவானுக்கு அஞ்சலி

அறந்தனை நிறுவினை அனைத்தறன் வடிவினை
சிறந்தனை பிறந்தபல் பிறவியுள் இறைவ!
இராமகிருஷ்ண! நின் இணைப்பதம் அடைந்தேன்
பராவுவன் யாண்டும் படிமிசைப் பரிந்தே!

# சீனாவைப் பற்றிய செய்திகள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

—அசாமி

மிகுந்த கட்டுப்பாடும், ஒழுங்கும், சட்டதிட்டங்களும் சீனாவில் நடைமுறையில் உள்ளன என்பதற்கு ஒரு சான்று: பாகித்தானிய அதிபர் ஜியா உல்-ஹக் 1984-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீனாவின் அழைப்புக்கு இணங்க அங்கு சென்று வந்தார். அவரோடு ஏராளமான பத்திரிகை நிருபர்களும் சென்றிருந்தனர். சீனாவின் மிகப் பெரியதான பெய்ஜிங் நகரத்தில் சில நாட்கள் அவர்கள் தங்கியிருந்தனர். வேறெதனையும் விட, ஒரே ஒரு காட்சி அவர்-ளுக்கு ஒரு புரியாத புதிராக இருந்தது. நாட்டின் தலைநகரமான பெய்ஜிங்கில் முக்கியமான சாலைகளிலும், தெருக்களிலும் ஆயிரக்-கணக்கான மக்கள் சைக்கிள்களிலேயே சென்று கொண்டிருந்தனர். உலகின் மிகப்பெரிய நகரங்களில் வரிசை வரிசையாக இருபுறமும் கார்கள் தான் சென்று கொண்டிருக்கும். சிறிய நகரங்களும், ஊர்-களும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் பெய்ஜிங் நகரமோ சைக்கிள் பட்டணமாகவே தோன்றியது. ஓரிரண்டு கார்களும், வேன்களும் ஆங்காங்கே காணப்பட்டாலும், அவையெல்லாம் சீன ராணுவத்திற்கோ, அல்லது அரசிற்கோ உரியவையாகவே இருந்தன.

பாகித்தானிய நிருபர் அருகேயிருந்த சீன வழிகாட்டியிடம் இது பற்றிக் கேட்டார். வழிகாட்டி கூறிய பதில் இதுதான். ''தனிப்-பட்ட யாராவது கார் வாங்க எண்ணினால், அரசினரிடம் அனுமதி பெற வேண்டும்.'' இந்த சுருக்கமான பதிலுக்குப் பிறகு அவர் இது பற்றி மேற்கொண்டு யாதும் கூறவில்லை. ஆயினும் உண்மை நமக்கு விளங்குகிறது. கார் வாங்க அனுமதி கேட்கும்போது, அதனை வாங்குதற்குரிய பணம் எங்கிருந்து வந்தது என்றும் விளக்கம் கொடுக்க வேண்டும். திறமைக்கேற்ற உழைப்பும், தேவைக்-கேற்ப ஊதியமும் கொடுக்கப்படும நாட்டில் 'உபரியாகப் பணம் தங்குவதற்கு வழி இல்லையே! அப்படியே நேர்மையற்ற வழி-களில் பணம் வந்தாலும், அதனை யாரும் செலவழித்து விட முடியாது. அரசினரிடம் அகப்பட்டுக் கொள்வர்.

நிலங்கள் அனைத்தும் அரசாங்கத்துக்குச் சொந்தம். தனிப்-பட்ட யாரும் வீடு வாங்க முடியாது. மாளிகை கட்டமுடியாது.

ஆடம்பரமான வாழ்க்கை வாழ முடியாது. இப்படிப்பட்ட நாட்டில் உபரியாகப் பணம் இருந்தாலும், அதனை என்ன செய்துவிட முடி-யும்? வீட்டிலும், மனையிலும், விடுதிகளிலும் முடக்கி கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கி விடுகின்றோர் உள்ள இந்தியா போன்ற ஜனநாயக நாடுகள் சீனாவிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இது என்று கூடச் சொல்லலாம்.

நூறு கோடி மக்கட் தொகையுள்ள ஒரு நாட்டை குறிப்பிட்ட ஒரு நியதிக்குள்ளும், கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டு வந்த பெருமை மாசே துங் எனும் மாபெருந்தலைவனுக்கே உரியதாகும். சமுதாய ஏற்றத்தாழ்வுகள் மலிந்து ஆண்டான்-அடிமை எனும் வேறுபாடுகள் மிகுந்து சுரண்டலும், வறுமையும் குடிகொண்டிருந்த சீனநாட்டினை சியாங் கே-ஷேக் தலைமையிலிருந்து மீட்கவேண்டிய பெரும் பொறுப்பினைத் தானே சுமந்து 1921 ஆம் ஆண்டு முதல் 28 ஆண்டுகள் கொரில்லாப் போர் நடத்தி 1949-இல் செஞ்சீனக் குடியரசினை நிறுவிய அத்தலைவனை அவர்கள் எங்ஙனம் மறக்க இயலும்? உள்நாட்டுப் போர் நடந்தபோது போர் வீரர்களுக்கு அவர் கூறியதாகச் சொல்லப்படும் இன்றியமையாத இராணுவ அறிவுரை-கள் இன்றும் நினைவு கூரத்தக்கவை; ''மாற்றான் மீதூர்ந்து வரும்போது பின்வாங்கி மறைந்து கொள். அவன் இயக்கமின்றி ஓய்வு கொள்ளும்போது, தொந்தரவு கொடு. அவன் போராட்டத்தைத் தற்காலிகமாகவேனும் தவிர்க்க விரும்பும்போது, தாக்குதலைச் செய். அவன் புறமுதுகிடும்போது துரத்து. எதிர்த்து முன்னேறி வந்தால், ஓடிஒளிந்து கொள்.'' முறையான பயிற்சி பெறாத, கொள்கைப்பற்று மிகுந்த, நெஞ்சுரம் வாய்ந்த, எண்ணிக்கையில் குறைந்த வீரர்களை வைத்துக் கொண்டு சியாங்கின் படைபலம் மிகுந்த, அனுபவம் பெற்ற ஒரு பெரிய சேனையினை எதிர்த்து மலை முகட்-டிலும், பள்ளத்தாக்கிலும் நதிக்கரைகளிலும் போராடியவர்களுக்கு இந்த அறிவுரைகள் பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆயினும் மாசேதுங் வாழ்ந்த காலத்திலேயே இது பொய்த்துப்போய் விட்டது.

சீனாவிற்கும் வியட்நாமிற்கும் 1979-இல் இங்கும் அங்குமாக எல்லைப் போர்கள் நிகழ்ந்தன. மூன்று வாரத்திற்குள்ளேயே இரு-பதினாயிரத்துக்கு மேற்பட்ட சீனத்து வீரர்கள் மடிந்தனர். இருப்-பினும், தான் ஒரு காலத்தில் நடைமுறைப் படுத்திய யுத்த

தந்திரத்தை மாசேதுங் முற்றிலும் விட்டு விடத்தயாராக இல்லை. ஆனால் இப்போதைய நிலைமை வேறு. மக்கள் சீனாவின் ராணுவம் உலக நாடுகளிலேயே வன்மை வாய்ந்த ஒன்றாகக் கருதப்படு-கிறது உலக வல்லரசுகளான ரஷ்யாவோடும், அமெரிக்காவோடும். அணு ஆயுதப்போட்டி நடத்தும் அளவிற்கு சீனா முன்னேறியிருக்-கிறது. நாற்பத்திரண்டு லட்சம் போர் வீரர்கள் அடங்கிய சீன இராணுவம் நூற்றுக்கு மேற்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்களையும், ஆறாயிரத்துக்குச் சற்று அதிகமான விமானங்களையும் பெற்றிருக்-கிறது. எண்ணாயிரம் மைல்களுக்கும் அப்பால் இருக்கும் இலக்கு-களைச் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைகளும் (Missiles) சீனா-விடம் உள்ளன. தனக்கென்று மிகவும் நீண்ட கடற்கரைகள் சீனா-வுக்கு இல்லையென்றாலும், போரிடும் சக்தி வாய்ந்த மிகப்பெரிய நீர்மூழ்கிக் கப்பல்கள் சில அணுசக்தியினால் இயங்கும் தன்மை வாய்ந்தனவாய் அதனிடம் உள்ளன.

உலகின் ஒரு வல்லரசாகத் திகழும் சீனாவிற்கு இட நெருக்கடி உண்டு என்பது யாவரும் அறிந்த உண்மை. நாடு பிடிக்கும் நோக்கம் இல்லையென்று உலக அரங்குகளில் மேலோட்ட-மாகச் சொல்லிக் கொண்டாலும், திபெத் நாட்டை சீனா விழுங்-கியதற்கு வேறு என்ன காரணம் கூறமுடியும்? பண்டித நேரு அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்தார். நாட்டு விடுதலைக்கு முன்பிருந்தே திபெத் தனி நாடாகவும், ஆங்கிலேயரின் பாதுகாப்-பிலும் சமூக, மத அரசியல் சுதந்திரத்தோடு விளங்கியது. ஒவ்-வொரு குடும்பத்தில் இருந்தும், ஓரிருவர் புத்தமதக் குருவாக மாறி விடுவது அந்நாட்டு வழக்கம். வருடத்தின் பெரும் பகுதி கடுங்குளிராக இருப்பதனாலே, அந்நாட்டைப் பற்றி வேடிக்கை-யான ஒரு கருத்தைச் சொல்வது உண்டு. ''திபெத் நாட்டில் மனிதன் இரண்டே முறை குளிக்கிறான். அவன் பிறந்தவுடன் ஒரு குளியல் - அவன் இறந்து போன பின் ஒன்று'' நாடெங்கணும் புத்த மடாலயங்கள் நிறைந்திருக்கும். வழிபாடு நடக்கின்றபோது பனிமூட்டத்தையும் அமைதியையும் கிழித்துக் கொண்டு லாசா நகரம் முழுவதும் மணியொலியும், 'ஓம் மான பத்ம ஓம்' என்ற ஒலியும் நிறைந்திருக்கும். வன்முறையும், போரும் என்னவென்றே தெரியாத லாமாக்கள் நிறைந்த அந்தச் சிறிய நாட்டை சீனா விழுங்கி விட்டது.

சீனாவிற்கு அந்த நோக்கம் இருந்ததுவும், தக்க வாய்ப்பினை அது எதிர்பார்த்து இருந்ததுவும் இந்தியாவிற்குத் தெரியாமல் இல்லை உலகநாடுகளுக்கு எல்லாம் அமைதியைப் போதித்துக் கொண்டிருந்த பண்டித நேரு இந்திய ராணுவ உயர் அதிகாரிகள் கூறிய அறிவுரையினைக் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. நேருவின் அயல்நாட்டுக் கொள்கையில் திபெத்தை விட்டுக் கொடுத்தது ஒரு தீராத களங்கமாகும். அப்போது ராணுவத் தளபதியாக இருந்த திம்மையா ஒரு அரிய யுத்த தந்திரம் ஒன்றைச் சொன்னார். இந்திய வீரர்கள் நேரடியாகத் திபெத் எல்லையில் போராட வேண்டிய நியதி இல்லை. ''திபெத் மலைப்பகுதிகளில் கம்பா மலைக்குடியினர் வாழ்கின்றனர். அவர்களுக்கு இரகசியமாக போர்க்கருவிகளைக் கொடுத்து சீனநாட்டின் ஊடுருவலைக் கொரில்லாப் போர் மூலம் தடுப்போம். அதற்கிடையில் உலக அரங்கில் திபெத் படுகின்ற இன்னலை வெளிப்படுத்தி சீனாவின் ஆக்கிரமிப்பைத் தடுத்து விடலாம்'' என்பதே அது. இந்த அரிய ஆலோசனையை நேரு காதில் வாங்கிக் கொள்ளவில்லை திபெத்தின் மதத்தலைவராக இருந்த தலாய் லாமா அலறிப்பார்த்தும் பயனில்லை. இரவோடு இரவாக தான் பிறந்த மண்ணைவிட்டுப் புறப்பட்டு இமாசல பிரதேசத்தில் தரம்சாலா என்னுமிடத்தில் வந்து தங்கி விட்டார்.

இன்று இஸ்ரேலிய நாட்டை முழு மூச்சாக எதிர்த்துக் கொண்டு வன்முறைப் போரில் ஈடுபடுகின்ற அராபிய நாட்டைச் சார்ந்த யாஸர் அராபத்துக்கு மேடை போட்டுக் கொடுக்கின்ற இந்திய அரசு, இருபது ஆண்டுகளுக்கு முன்னால் தலாய்லாமாவுக்கு அரசியல் உதவியேதும் செய்து கொடுக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபைக்குத் தமது சிக்கலை எடுத்துச் சொல்லுமாறு நேருவிடம் அவர் வேண்டிக் கொண்டதையும் நேரு உள்ளிட்ட தலைவர்கள் யாரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

இந்தக் கால கட்டத்தில் சீனப்படை திபேத்தியர்களுக்கு இழைத்த கொடுமைகளையும், அந்நாட்டை நயவஞ்சகமாக விழுங்கியதையும் பற்றி விவரமாக அறிய விழைவோர் தலாய் லாமாவின் தன் வரலாற்றைப் (சுய சரிதம்) படித்தல் வேண்டும்.

(தொடரும்)

*தண்டபாணி தேசிகர் வரலாறு*

பழநி. அரங்கசாமி

(தொகுதி 78-பகுதி 1ன் தொடர்ச்சி)

தேசிகர் அவர்கள் மீனாட்சி தமிழ்க்கல்லூரியில் சேர்ந்து பயிலத் தொடங்கினார். ஐயாற்றில் விடுபட்ட அருந்தமிழ்ப் படிப்பு தில்லையின் எல்லையில் திரும்பவும் தொடங்கிற்று. இன்றைய அண்ணாமலை நகரைச் சார்ந்த பகுதிக்கு அப்போது திருவேட்களம் என்பது பெயர். தமிழ்க் கல்லூரியின் நிறைநிலை வகுப்பினைக் குறைவற முடித்த தேசிகர், வித்வான் வகுப்பில் முதல் மாணவனாகத் தேறியதில் வியப்பில்லை. திருப்பனந்தாள் சைவ மடத்தின் தலைவராகத் திகழ்ந்தவர்கள் சாமிநாத தம்பிரான் சுவாமிகள் ஆவர். மாநில அளவில் தமிழ் வித்வான் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறுவோருக்கு ஆயிரம் வெண் பொற்காசுகள் பரிசு தரப்படும் என்ற திட்டத்தை 1928 ஆம் ஆண்டிலேயே திருப்பனந்தாள் மடத்து அதிபர் நிறைவேற்ற இருந்தார். தமிழ்க்கல்லூரியின் தலைவராக இருந்த உ.வே.சா. அவர்களையும் கலந்து ஆலோசித்துக் கொண்டு எதனையும் செய்வது என்பதை வழக்கமாகக் கொண்டிருந்தவர் சாமிநாதத் தம்பிரான் அவர்கள் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் நினைவுப் பரிசாக நிறுவப்பட இருந்த அந்தப் பரிசுத் திட்டத்தை 1929-ஆம் ஆண்டுக்குத் தள்ளி வைக்கச் செய்த பெருமை உ.வே.சா. அவர்களுக்கு உரியதாகும். 1929-ஆம் ஆண்டு புலவர் நிறைநிலை வகுப்பில் முதல் மாணவனாக வெளிவந்து ஆயிரம் ரூபாய்ப் பரிசினையும் முதன்முதலில் பெற்றுக் கொண்டவர் கி.வா. ஜகந்நாதன் ஆவார். மடத்து அதிபர் விழைந்தவாறே 1928-இல் ஆயிரம் ரூபாய்ப் பரிசுத் திட்டம் நடைமுறைக்கு வந்திருக்குமானால் தேசிகரே அப்பரிசினைப் பெற்ற முதல் மாணவனாக இருந்திருப்பார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஆயிரம ரூபாயின் மதிப்பு இன்றைய பத்தாயிரத்துக்குச் சமம் என்று கூடச் சொல்லலாம். தேசிகரோடு உரையாடிக் கொண்டிருந்த போது இந்தக் கடந்த கால சம்பவத்தை மிகவும் தயக்கத்துடனே தான் கூறினார். உண்மையாக இருப்பினும், பிறர்குற்றம் காணக் கூசுகின்ற நல்லியல்பு தேசிகருடன் கூடப் பிறந்தது எனலாம்.

வித்வான் வகுப்பைச் சிறப்புற முடித்த இரண்டே மாதங்கள் கழித்து கல்லூரி திறக்கப் பெற்றது. தமிழும் தமிழிசையும் வளர வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியாரின் கையொப்ப

மிட்ட பதவி ஆணையப் பெற்று கொண்டு தேசிகர் அவர்கள் மீனாட்சி தமிழ்க்கல்லூரியிலேயே 1928-ஆம் ஆண்டு ஜூலை முதல் 1930-ஆம் ஆண்டு மே வரை தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இதற்கிடையில் நாகைப்பட்டினத்தில் தனியார் நடத்தி வந்த தேசீய உயர்நிலைப்பள்ளிக்கு தமிழாசிரியராகப் பணிபுரியவேண்டும் என்று அழைத்துக் கொண்டிருந்தார்கள். அப்பள்ளியின் நிறுவனரே வந்து அழைத்தமையான், தேசிகர் அவர்கள் கல்லூரியை விட்டு உயர்நிலைபள்ளிக்குச் செல்வதாயினும் குற்றமில்லை என்றெண்ணி நாகையில் சென்று பதவியேற்றுக் கொண்டார்கள். அரண்மனையின் ஏவலனாக இருப்பதைவிடக் குடிசையின் தலைவராக இருப்பது நன்று என்ற எண்ணம் தேசிகருக்கு மேலோங்கியிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. நாகையில் தமிழ்ப்பணி ஏழாண்டுகள் நீடித்தது. அதனைத் தொடர்ந்து 1942 - ஆம் ஆண்டு வரை எட்டு ஆண்டுகள் திருவாரூரில் மாவட்ட உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் பணி. பிற்காலத்தே திராவிட இயக்கத்தில் தந்தை பெரியாரின் தொண்டனாகச் சேர்ந்து, அறிஞர் அண்ணாவால் வளர்க்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகி தமிழக முதல்வராகவும், இன்று எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கின்ற தலைவர் கருணாநிதி, தேசிகரின் மாணவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தெரிந்த செய்தி இங்கு கூறப்படுகிறதேயன்றி, தேசிகர் அதனைப்பற்றிச் சொல்லுவதோ, பெருமைப்பட்டுக் கொள்வதோ இல்லை என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

குடந்தைக்குப் பதினைந்து கல் தொலைவில் உள்ளது திருப்பனந்தாள் என்னும் அழகிய கிராமம். தென்னஞ்சோலைகளும், பச்சைக்கம்பளம் விரித்தாற் போன்ற பசுமையான நெல்வயல்களும் அந்த ஊரின் செழுமைக்குச் சான்று. அங்குள்ள சைவமடத்தின் சார்பில் தனித் தமிழ் வித்வான் பட்டத்திற்குப் பயிலுதற்கான செந்தமிழ்க்கல்லூரி ஒன்று தொடங்கப் பெற்றிருந்தது. உயர் நிலைப்பள்ளியில் பணி புரிந்தவராயினும் தேசிகரது சமய, இலக்கண, இலக்கிய நுழை புலன் அறிந்த சைவமடத்தினர் அவரைத் தமது கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக வந்து பணி புரியுமாறு அழைத்தனர். திருப்பனந்தாளில் மூன்று ஆண்டுகளே

பதவியில் இருந்தாலும், தொடர்ந்து கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பணிபுரியவும், ஆய்வு நடத்தவும் திருப்பனந்தாளில் கல்லூரியில் தொடங்கிய மேல்நிலைப்பணி ஒரு அடித்தளமாக அமைந்தது எனலாம்.

உயர்நிலைப்பள்ளிகளிலே தேசிகரது ஆசிரியப்பணி நிறைவுற்றிருக்குமானால், பிற்றை நாட்களில் அவரது தேர்ந்த புலமைக்-குச் சான்று பகரும் தலபுராணங்களும், உரை விளக்கங்களும், ஆய்வு நூல்களும், கல்வெட்டு ஆராய்ச்சிகளும், இலக்கியத்-திறனாய்வுகளும் வெளிவந்திருக்கும் என்று உறுதியாகச் சொல்ல இயலாது திருப்பனந்தாளில் பணியாற்றிய 1946 - ஆம் ஆண்டு வரை வகுப்பறைகளோடு நின்றிருந்த தேசிகரின் அறிவுத் திறமை அவர் தருமையாதீனக் கல்லூரிக்கு வந்த காலந் தொடங்கி கட்டுரைகளாகவும், நூல்களாகவும் வெளிப்போந்தது.

(தொடரும்).

### அறிவியலினால் ஆபத்து

விஞ்ஞானமும் தொழில் நிலையங்களும் பெருக வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆயினும் காலப்போக்கில் அறிவியல் பெருக்கத்தால் நன்மையை விடத் தீமையே விளைகிறது என்று உணர்கிறோம். பூச்சிக் கொல்லி மருந்துக்குத் தேவையான நச்சுவாயுவினால் ஏறத்தாழப் பத்தாயிரம் மக்கள் மத்திய மாநிலத் தலைநகரான போபாலில் மாண்டு மடிந்ததே இதற்குச்சான்று மெதில் அய்சோசயனைட் என்ற அந்த நச்சுக்காற்று மக்கள், மாக்கள் என்ற வேறுபாடின்றி போபால் நகரின் ஒரு பகுதியை பிணக்காடாக ஆக்கி விட்டது நகர்ப்பகுதியின் மையத்தில் அமைந்துள்ள நேஷனல் கார்பைடு என்னும் அத்தொழிற் சாலையை இப்போது மூடிவிட முடிவு செய்துள்ளார்கள்.

# தமிழக முதல்வரின் உடல் நலம்

தமிழக முதல்வர் எம். ஜி. ஆர் சென்னை அப்போலோ மருத்துவ மனையில் இருந்த காலத்தே முற்றிலும் நோய் நீங்கிக் குணமடைந்து வெளி வருவாரா என்ற அச்சம் மேலோங்கியிருந்தது. உணர்ச்சி வயப்பட்ட இளைஞர் சிலர் எம். ஜி. ஆர். இல்லாத தமிழகத்தில் நாம் ஏன் இருக்கவேண்டும் என்றெண்ணித் தமது இன்னுயிரையும் மாய்த்துக் கொண்டனர். தமிழகக் கோயில்களிலும், மசூதிகளிலும், கிறித்தவ ஆலயங்களிலும் முதல்வர் குணமடைய வேண்டி வழிபாடுகள் நடைபெற்றன. கடவுட் கொள்கையைக் கண்டனம் செய்த ஈரோட்டுப் பெரியாரின் இறையுணர்வுக்குச் தொண்டரெலாம் வழிபாடு நடத்தியமை காலங்காலமாக அழியாது நிற்கும் இறையுணர்வுக்குச் சான்று. இந்நிலையில் முதல்வரது உடல்நலம் பற்றி அமெரிக்க நாட்டு புரூக்லின் மருத்துவமனையிலிருந்து வருகின்ற செய்திகள் மகிழ்ச்சி தருவனவாய் உள்ளன. பால் அருந்துவதும், எழுந்து நின்று நடப்பதுவும் நோய் நீங்கும் அறிகுறிகள். தலையில் உள்ள வீக்கமும் குறைந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. சிறுநீரகக் கோளாறும் நீக்கப்பட்டு விட்டால், அறுவைச் சிகிச்சை முடிந்து தமிழகத்துக்குத் திருப்பி விடக்கூடும் என்று தெரிகிறது. இன்னும் ஒரு திங்கள் அங்கேயே இருக்க வேண்டுமாயினும் நன்று. முற்றும் குணமடைந்து வந்தால் தமிழகத்து மக்களுக்கு அதனைவிட மகிழ்ச்சியான செய்தி வேறொன்றும் இருக்க முடியாது. 73 - வயது நிரம்பிய ரொனால்டு ரீகன் மீண்டும் இரண்டாவது முறையாக அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அது போன்றே நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலில் தமிழக முதல்வரும் வெற்றி பெற்று ஆட்சி பீடமேறினாலும் வியப்பொன்றுமில்லை.

## அணில் உண்ணும் அழகு

—திரையன்

அழகிய அணிலே! அழகிய அணிலே!
மெல்லிய காற்றால் மேனி சிலிர்க்கும்
புல்லிய இதழின் புறமும் முன்பும்

வாலை வளைத்துக் காலைத் தூக்கி
கிளையும் கொப்பும் வளைந்து கொடுக்க
பாய்ந்தும் தாவியும் பறந்து ஓடியும்
நெளிந்தும் வளைந்தும் நெருங்கிச் சென்றும்

மொட்டையும் மலரையும் முறித்து வைத்துக்
காலால் பறித்து வாய்க்குள் தள்ளி
உண்ணும் அழகை உன்னிடம் கண்டு
எண்ணி மகிழும் யானொன்று கேட்பேன்!

வியத்தகு விரைவும் நயத்தகு வேகமும்
இயற்கையோ டியைந்த இனிய வாழ்வும்
உயிர்க் கொலை புரியா உயர் நெறி தானும்
யானும் பெறவழி இயம்பிட வேண்டுவல்!

# இலக்கியச் சிந்தனைகள்

இலக்கியச் சிந்தனைக்கு எழுத்துருவம் கொடுப்பதற்குச் சில தினங்களுக்கு முன் 'இந்து' ஆங்கில நாளிதழினை புரட்டிக் கொண்டிருந்தேன். வாசகர்கள் எழுதும் கடிதங்களில் ஒன்று என் கவனத்தை ஈர்த்தது. 'இலக்கியத்தில் பரவலாகப் பேசப்படும் அன்றில் பறவை பற்றி விலங்கியல் பறவை இயல் (ornithology) நிபுணர்களிடம் கேட்டறிய முயன்றேன். யாருக்கும் தெரியவில்லை. அதனைக் கண்டறிந்ததாகவும் கூறவில்லை' 'என்று கடிதம் எழுதிய அன்பர் சற்றே வருத்தமுற்றிருக்கிருர். இதில் ஒரு வியப்பான செய்தி ஒன்று உண்டு. இந்தப் பறவையினை இராமநாதபுர மாவட்டம் காரியாபட்டி பகுதியில் பார்த்தேன் என்று இந்தவாசகர் கூறுவதே அச்செய்தி. ''நாற்பது, ஐம்பது பறவைகள் தான் எஞ்சியுள்ளன; அந்த இனம் அழிந்து போகாமல் காப்பாற்றப்படவேண்டும்'' என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். பம்பாயில் வாழ்ந்து வரும் தொண்டு கிழவர் சலீம் அலி என்பாரே பறவையினங்களைப் பற்றி மிக விரிந்த ஆய்வு செய்து இந்திய, பாகித்தானிய பறவை இனங்கள் குறித்து மிகுதியான நூல்கள் எழுதியுள்ளார். மிகவும் பொறுமையாக, இரவு பகல் பாராது காடுகளில், மரக்கிளைகளில், புதர்களில் நீர் நிறைந்த ஏரிக்கரைகளில் மணிக்கணக்கில் அமர்ந்து பறவைகளின் போக்கு, உணவு உண்ணும் முறை. இனப்பெருக்கம் ஆகியவை பற்றிய குறிப்புகளை அந்தந்தப் பறவைகளின் புகைப்படங்களோடு தமது நூல்களில் குறித்துள்ளார். அன்றில் பறவையும் வேறெந்த பெயரிலாவது ஒளிந்து கொண்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இல்லையாயின் சலீம் அலிக்கு மட்டுமன்றி, அரசினரின் கவனத்துக்கும் இச்செய்தி அறிவிக்கப்பட வேண்டும்.

அன்றில் பறவை பற்றி நாம் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்வதில் வியப்பு ஒன்றுமில்லை- சங்க இலக்கியத்தில் இணை பிரியா நட்புக்கு இலக்கணமாக இப்பறவைகள் எடுத்துக் காட்டப் படுகின்றன.

சங்க இலக்கியத்தில் மட்டுமன்றி, இற்றைக்காலக் கவிதைகளிலும் அன்றில் பறவை பேசப்படுகிறது.

''பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல் செயப் பெண் கேட்கின்றான்;
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ''

விதவை மணத்தை ஆதரித்துப் பேசும் புரட்சிக்கவிஞர் பாரதி தாசனின் பாடற்பகுதியே இது. நமக்குத் தெரியாத எண்ணற்ற கவிஞர்களும் அன்றில் பறவையின் ஈடிணையற்ற அன்பினைக் குறித்துப் பாடியிருக்கலாம். இந்த அன்றில் பறவையின் இவ்வியத்தகு குணத்தினை அறிந்த பின்னரே கவிஞர்கள் தமது கவிதைகளில் இதனைக் குறிப்பிட்டனர் என்பது பொருந்தாது. ஒருவர் கூறியதை மற்றொருவர் அடியொற்றிச் செல்லும் இலக்கிய மரபு தான் இது. ஆயினும் இலக்கியங்களில் மிகவும் தொன்மையான சங்க இலக்கியங்களில் இச்செய்தி கூறப்படுவதை ஆய்ந்து பார்க்க வேண்டும். அன்றில் பறவைகள் இருப்பது உண்மையாயின், அவை பாதுகாக்கப்படவும் வேண்டும். இதுபற்றிய இலக்கியம் தோய்ந்த ஆய்வு நடத்தப்பட்டு, அவற்றின் அரிய பண்பு உண்மையே என்று தெரிந்தால், சங்கக கவிதைகளின் இயற்கை நலம் வாய்ந்த கற்பனைகள் வெறும் புளுகுகளோ, வெற்றுரைகளோ அல்ல என்று உறுதியாகச் சொல்லலாம்.

அசுணம் என்ற ஒரு பறவை இருந்தது (நற்றிணை 244, 304) அது மிகவும் உணர்ச்சி வயப்பட்டது. இனிய ஒலியினைக் கேட்டபிறகு, மரண ஊர்வலத்தில் கொட்டப்படுவது போன்று கடுமையான பறையொலி கேட்டால் மரங்களிலிருந்து பொத்தென்று கீழே விழுந்து இறந்து படும் என்று கூறப்படுகிறது. இப்பறவையினம் இப்போது இல்லை. அசுணமா என்று குறிப்பிட்டு இதனை விலங்கு எனவும் கூறுகின்றனர். இயற்கை நலஞ்சான்ற கற்பனைகளில், பரவலாகப் பேசப்படும். பறவையினங்கள், விலங்கினங்கள் ஆகியன குறித்து அறிவியல் கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்யப்படுவது இற்றை நாட்களில் மிகச் சிறந்த பணியாக அமையும்.

தொல்காப்பிய மரபு இயலில் ஒரு நூற்பாவிற்குப் பொருள் கூற வந்த இளம்பூரணர் 'தன் பார்ப்புத் தின்னும் பண்பில் முதலை, என்று ஒரு மேற்கோள் காட்டுகிறார். சிற்சில சந்தர்ப்பங்களில், பூனை தனது குட்டியையே உண்ணும் என்பதும் மீன் கணக்கில்லாமல் குஞ்சுகளைப் பொரிக்கும்போது தனது குஞ்சுகளில் சிலவற்றையே விழுங்குவது உண்டு என்பதும் உண்மை. முதலைகள் தத்தமது குட்டிகளை உண்ணுமா என்பது கண்டறியப்படவேண்டும். ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய ஆறுகளான நைஜர், காங்கோ, நைல் ஆகியவற்றில் முதலைகள் உண்டு என்று படித்திருக்கிறேன். நமது நாட்டில் அண்மைக் காலத்தில்தான் திருச்சிக்கு அண்மையில் உள்ள கல்லணை போன்ற இடங்களில் முதலைப் பண்ணைகளை அரசினரே நடத்துகின்றனர்.

விலங்கினங்கள், பறவைகள் குறித்து தொன்மை வாய்ந்த தமிழிலக்கியத்தில் மட்டுமல்ல; நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் தலைசிறந்த ஆங்கில நாடகக்கவிஞராக விளங்கிய ஷேக்ஸ்பியரின் நாடகங்களிலும் குறிப்புகள் வருகின்றன. விரும்பிய வண்ணமே (As you like It) எனும் நாடகத்தில் சிங்கத்தைப் பற்றிய ஒரு செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலிவர் என்பான் காட்டில் ஒரு மரத்தடியில் உறங்குகின்றான். மேலே உள்ள கிளையிலிருந்து பாம்பு ஒன்று தொங்குகிறது அத்தோடு ஒரு புதருக்குப் பக்கத்தில் கடுமையான பசியுடன் சிங்கம் ஒன்றும் காத்திருக்கிறது தூங்கு-கின்றவனை சிங்கம் கொல்வதில்லை; எனவேதான் அது காத்-திருக்கிறது என்று ஷேக்ஸ்பியர் குறிப்பிடுகிறார். இந்தியாவில் புலி வேட்டையாடி அது பற்றிய அச்சமூட்டக் கூடிய அனுபவங்-களைச் சுவைபட ஜிம் கார்பெட், கென்னத் ஆன்டர்சன் போன்-றோர் நூல்களாக எழுதி வைத்துள்ளனர். இவருள் ஜிம் கார்பெட் பெற்ற அனுபவங்கள் அனைத்தும் வடநாட்டில் தான். தமிழகக் காடுகளிலும், மைசூர்க்காடுகளிலும் தாம் நடாத்திய வீர தீரச் செயல்களை ஆன்டர்சன் வரைந்துள்ளனர். சிங்க வேட்டை பற்றியும், சிங்கத்தின் இயல்பு குறித்தும் நூல்கள் இல்லை. உலகில் சிங்கத்தின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. இந்திய நாட்டிலேயே குஜராத் காடுகளில் சிங்கங்களை அரசினரே பாது-காத்து வருகின்றனர். இந்த நிலையில் ஷேக்ஸ்பியரின் கருத்தை உண்மையா என்று அறிவது நம்மால் இயலுமா? இருப்பினும் வேறு வகையில் முயன்று பார்க்கலாம்.

—அசராபி.

# இந்து மதத்தின் இதயம்

எஸ் — சந்தான கோபாலன்
சென்னை

ஒவ்வொரு மதத்திற்கும் சாத்திரம் இன்றியமையாதது. மதம் மறைந்து போகாமலிருக்க சாத்திரம் துணைபுரிகிறது. எந்த மதத்திற்குச் சாத்திரம் இல்லையோ, அம்மதம் விரைவில் உருமாறி அழிந்து போகும் நிலைக்கும் வந்து விடுகிறது. ஆனால் ஒரு நூலை உறுதியாகக் கொண்ட மதம் என்றைக்கும் நிலைபெற்றிருக்கிறது. உலகத்தில் நிலைத்துள்ள மதங்களுக்கெல்லாம் தனித்தனி சாத்திரங்கள் உள்ளன.

கிறித்துவ மதந்திற்குச் சாத்திரம் பைபிள். இஸ்லாமிய மதத்திற்குச் சாத்திரம் குர்ஆன். புத்த மதத்திற்குச் சாத்திரம் "தம்மபதா". இந்து சமயத்திற்கு எது? இவ்வினாவிற்கு இந்துக்களிடமிருந்து ஒரே விதமான விடை வராது. என்? அவரவர்களுக்கு விருப்பமானதைச் சாத்திரம் என்று சொல்லுவர். கற்றறிந்து நடுநிலை வகிப்பவர்கள் எதை முக்கியச் சாத்திரம் எனச் சொல்வது என்று திகைப்பர். ஏனெனில் இந்து மதத்தில் கணக்கற்ற சாத்திரங்கள் உள. பொதுவாக சாத்திரங்கள் யாவற்றிற்கும் வேதங்கள் அடிப்படை. வேதங்கள் நான்கு என்பர். அவை இருக்கு, யசுர், சாம, அதர்வணம் என்பன. இவைகளில் சில பகுதிகள் மறைந்துவிட்டன என்று சொல்லுகிறார்கள். வேதங்களிலிருந்து தெளிந்து எடுக்கப்பட்டவை உபநிடதங்கள் இவைகள் நன்கு காப்பாற்றப்பட்டு வருகின்றன. எல்லா உபநிடதங்களிலும் அடங்கியுள்ள கருத்துக்களைத் தெளிவுபட விளக்குவது பகவத்கீதை. இது மகாபாரதம் என்னும் இதிகாசத்தில் அடங்கியுள்ளது, மகாபாரதத்தை ஐந்தாவது வேதம் எனப் பகர்வர். உபநிடதங்களைப் பசுக்கள் என்றால், பகவத்கீதையைப் பால் எனலாம். நேரே பாலைப் பெற்றுக் கொள்ளும் வசதி படைத்தோர்க்குப் பசுக்களை வளர்க்கும் சிரமம் வேண்டியதில்லை.

18 அத்தியாயங்களையும் 700 சுலோகங்களையும் கொண்ட பகவத்கீதை மகாபாரதத்தில் அடங்கியுள்ளது. ஆனால் சிலர் பகவத்கீதை என்ற சாத்திரம் பிற்காலத்தில் மகாபாரதத்தில் புகுத்தப் பெற்றது எனக் கருதுகிறார்கள். ஆனால் அதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

நூல் அமைப்பிலும், கருத்து அமைப்பிலும், மொழி அமைப்பிலும் ஒற்றுமை இருப்பதால் இக்கருத்துச் சரியன்று எனத்

தெளிவாகப் புலப்படுகிறது. மகாபாரதம் என்ற உடலுக்குப் பகவத்கீதை இதயமாக அமைந்துள்ளது என்றும் கூறலாம். உடல் ஒரு காலத்திலும் இதயம் வேறொரு காலத்திலும் உண்டானவை களாக இருக்க முடியாது.

உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்றும் பிரஸ்தானத்திரயம் எனச் சொல்வதுண்டு. முடிவான பிரமாணங்கள் கொண்ட நூல்கள் ஆகையாலும், இவற்றுள் கருத்து வேற்றுமை இல்லாமையாலும், இவைகளில் தத்துவ விளக்கம், மெய்ப்பொருள் விளக்கம் ஆகியவை அடங்கியுள்ளமையாலும் இவைகளை இந்து மதத்திற்குச் சாத்திரம் எனச் சொல்லலாம். இவைகளில் அடங்காத தத்துவ விளக்கம் வேறு எந்த நூலிலும் இல்லை எனச் சொல்லலாம், ஆகையால் இந்து மதத்தின் இதயம் பகவத்கீதை எனலாம்.

கீதையின் தொடக்கமே இருவரின் மனோநிலைகளுக்கு ஏற்பட்ட போராட்டத்தின் முடிவு என்ன என்ற கேள்வியாக அமைகிறது. அதாவது கடவுள் நமக்குத் துணையாக இருந்தால் எதிரிடையான மற்றவைகள் என்ன செய்ய முடியும்? கடவுள் துணை நமக்கு இல்லாது போய்விட்டால் துணையான மற்றவைகள் நமக்கு என்ன நன்மையைச் செய்துவிடும்? இவைகள் வாழ்க்கைத்தொடர்பான இரு பெரிய கேள்விகள். கீதை இவைகளுக்கு விடை தருகிறது.

போர்க்காலத்தில் கீதை உபதேசிக்கப்பட்டதாகும். அதாவது போர் புரிவதா, புறங்காட்டி ஓடுவதா? இது பிரச்சினை. அன்றாட வாழ்வில் ஒவ்வொரு மனிதனும் இப்படிச் சோதனைக்கு ஆளாகிறான். கடலில் அலைகள் போன்று வாழ்க்கையில் சோதனைகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன, மீளமுடியாச் சோதனை வருவதும் உண்டு. வாழ்க்கையின் அறநெறி தெரியாவிட்டால் அவற்றினின்று மீள்வது கடினம் இவற்றுக்கெல்லாம் உகந்த வழியைச் சொல்வது பகவத்கீதை.

கண்ணனது கீதை உலக வாழ்வுச் சாத்திரம் எனலாம். கீதையில் குறிப்பிடப்படுகின்ற குருட்சேத்திரப் போரும் அதில் கலந்து கொண்ட பாத்திரங்களும் அன்றாடம் ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் நடக்கும் நாடகம் தான். நமது உடலே குருட்சேத்திரம்; நல்வினை, தீவினை ஆகிய இவற்றைக் கொண்டது. இந்தச் சீவனிடத்து நல்லியல்பு, கெட்ட இயல்பு ஆகிய இரண்டும்

உண்டு நமது வாழ்வை இவ்வியல்புகள் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முன்படுகின்றன. இவற்றின் நடுவில் மனிதன் இவ்வுலகில் எப்படி வாழ்ந்து கொள்ள வேண்டும் எனத் தெளிவாகத் தெரிவிக்கிறது கீதை. எப்படி ஒருவனுக்கு இதயம் தான் முக்கிய உறுப்போ, அது போல் கீதை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத் துணையாகும்.

மனிதன் உலகில் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கண்ணன் கீதையில் விளக்குகிறான் இது மனிதனுக்கு அவசியம். ஏனெனில் இவ்வுலகில் மக்கள் விலங்குத் தன்மைக்கும், தெய்வத் தன்மைக்கும் இடைநிலையில் உள்ளனர். இவர்கள் நல்லது கெட்டது என்ற இரு குணங்களும் படைத்தவர்கள். கெடுதலை அகற்றி, நலத்தில் நிலை பெறுவது மானிட வாழ்க்கையின் குறிக்கோள். கீதாசாத்திரம் அதற்கு உறுதுணையாக இருக்கிறது. எனவே மக்கள் எல்லோர்க்கும் கீதை சிறந்த வழிகாட்டியாகிறது.

வாழ்க்கையை எவ்வாறு பொருள்படி நடத்த வேண்டும் எனக் கண்ணன் தனது வாழ்க்கை மூலம் விளக்குகிறான். பத்து வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவனாக இருந்தபோது பிருந்தாவனத்தில் பல லீலைகளைப் புரிந்து உலகம் ஒரு விளையாட்டு அரங்கு என்றும், வாழ்வு பெரிய விளையாட்டு என்றும் அதை நன்கு விளையாடத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் காட்டுகிறான்.

வாழ்வை ஒரு முடிவில்லாத போராட்டம் என வயது வந்த கண்ணன் கீதையில் விளக்குகிறான். எதைப் பெற விரும்பினாலும், உயிர்கள் அதன் பொருட்டு போராடியாக வேண்டும். போர் புரியத் தெரியாதவர்களுக்கு இவ்வுலகிலும், வேறு எவ்வுலகிலும் ஒன்றும் அகப்படாது. ஒரு பொருள் வேண்டுமென்று பிள்ளை தாயிடம் அழுகிறது. அது ஒருவிதப் போராட்டம். ஒரு வேலையில் அமர்தற் பொருட்டுத் தொழிலாளி தன் வல்லமையைக் காட்டுகிறான். அதுவும் போராட்டமே. பெரிய அரசுகள் நிறுவப்பெறுவதும், நடைபெறுவதும் போராட்டத்தின் பயனேயாம். எத்துறையிலாவது மனிதன் சிறிது முன்னேற்றம் அடைந்திருக்கிறான் என்றால், அவன் வெற்றிகரமாகப் போராடியிருக்கிறான் என்ற பொருள் அதில் அடங்கியிருக்கிறது. சண்டைகள் பலவற்றைக் கண்ணன் தானே திறம்படச் செய்து முடித்திருக்கிறான். அவனுடைய வாழ்க்கையே போராட்டத்துக்கு எடுத்துக் காட்டு ஆகிறது, போர் மயமாயுள்ள வாழ்க்கையில்

மனிதன் எத்தகைய பாங்குடன் அடியெடுத்து வைக்க வேண்டு-மென்று பகவத்கீதை புகட்டுகிறது. ஒவ்வொரு மனிதனும் வாழ்வு என்னும் போராட்டத்துக்குத் தகுதியுடையவன் ஆக வேண்டும்.

பகவத்கீதையில் இவ்வுலகத்தோடு தொடர்புடைய பல கோட்-பாடுகள் உள. அவை அமிர்தத்திற்கு ஒப்பானவை, பல்லாயிரம் மக்களுக்குப் பரமார்த்திக வாழ்க்கைக்கு அது வழிகாட்டியாக உள்ளது புலனடக்கமும் பக்தியும், தன்னலத் தியாகமும், தவமும், தொண்டு புரிதலும் இன்றியமையாத தொண்டுகள் என மக்களுக்குத் காட்டுகிறது.

*கீதை புகட்டுவது யாது?*

கீதையில் வரும் கண்ணனும் அர்ச்சுனனும் தோழர்கள். உறவினர்கள் கூட இவ்வுறவு சீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் உள்ள இணக்கத்தைக் குறிப்பது. அர்ச்சுனனுடைய மன நிலைக்-கேற்ற உதவிகளை அப்போதைக்கப்போது கண்ணன் செய்து வந்தான். நல்ல கல்வி பெறுதல், பயிற்சி பெறுதல், அரசு நிறுவு-தல், ஆபத்தினின்று தப்பித்துக் கொள்ளுதல், எதிரியிடத்தினின்று மீளுதல், பொருள் தேடுதல் ஆகியவை போன்ற உலகியல் நிலைகள் அனைத்துக்கும் அவன் துணை செய்து வந்தான், தன் தங்கையையே அர்ச்சுனனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான், இம்மையில் இன்ப-மூட்டும் இவையாவற்றையும் பிரேயஸ் என்பர் பெரியோர். பல பிறவிகள் எடுத்து விரும்பியவைகளைப் பெற்று மகிழ்வுற்றிருக்கின்-றனர் உலகோர், இவையாவற்றையும் உயிர்களுக்கு நல்கியவர் கடவுள். வாழ்க்கையில் பின்னிலையில் நெருக்கடி ஒன்று வருகிறது. அர்ச்சுனனுக்கு போர் என்னும் நெருக்கடி வந்தது. போருக்கு அவன் அஞ்சியவன் அல்லன். மகாதேவனையே முன்பு எதிர்த்துப் போர் புரிந்தவன். ஆனால் இந்த நெருக்கடியில் அவனுக்கு மனக்குழப்பம் உண்டாயிற்று. போர் புரிவது சிறந்ததா? எதிர்ப்பவர்க்கு எல்லா-வற்றையும் விட்டுக் கொடுத்து விடுவது சிறந்ததா? செய்வது இன்னதென்று தெரியாது திகைத்தான், அவன் பெற்ற பேரும் புகழும், போகமும் இந்த நெருக்கடியில் பயன்படவில்லை. சுருங்கச் சொன்னால் அவன் பெற்றிருந்த பிரேயஸ் பயன்படாது போய்-விட்டது. ஆகவே அச்சுதனிடம் அவன் அடைக்கலம் புகுந்தான்; சீடன் ஆனான். சிரேயஸைப் புகட்ட வேண்டுமென்று விண்ணப்-பித்தான்,

அர்ச்சுனனுக்கு அத்தகைய மனநிலை வரும்வரை கண்ணன் காத்திருந்தான். ஏனென்றால் தோழமையில் பிரேயஸை வழங்கலாம்; 'சிரேயஸை' நல்கலாகாது. சீட பாவனை வருமுன்பு சிரேயஸைப் புகட்டினால் அது பயன் தராது பூமி விதைப்புக்குப் பண்பட்டுள்ளது போன்று அர்ச்சுனனுடைய மனம் இப்பொழுது சிரேயஸைப் பெறுவதற்குப் பண்பட்டு விட்டது. அதைக் குறித்து கண்ணன் பெரு மகிழ்வடைகிறான். உள்ளன்போடு சிரேயஸை எடுத்துப் புகட்டுகிறான். ஞானமும் யோகமும் அடங்கப்பெற்றது சிரேயஸ்.

பண்பட்ட பூமிக்குள் நல்ல விதை விதைப்பது போன்று, சிறந்த சாத்திரம் ஒன்று எப்பொழுதும் எடுத்த எடுப்பிலேயே சிரேயஸின் உட்கருத்தைத் தெளிவுபட உள்ளத்தினுற் புகட்டிவிடுகிறது. பிறகு அதற்கு விளக்கமாக மற்ற பகுதிகள் பின் தொடரும். சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். தோற்றத்துக்கு அப்பால் இருப்பது பூரணம். தோற்றத்துக்கு வந்திருப்பது பூரணம். பூரணமே யாண்டும் உள்ளது. இந்த வாக்கியங்களில் உபநிடதத்தின் நிறைவான உட்கருத்துகள் அனைத்தும் வந்துவிடுகின்றன. பிறகு இதற்கு விளக்கமாக மற்ற பகுதிகள் அனைத்தும் வருகின்றன. பகவத்கீதையினுடைய போக்கும் இத்தகையதே.

கீதையில் கண்ணன் ஒரு உயர்ந்த உலகநியதியைக் காட்டுகிறான். அதாவது வாழ்க்கையில் ஒருவனுக்கு நெருக்கடி ஏற்பட்டால் உள்ளச் சோர்வு அடையாமல் தனது கடமையைச் செய்ய வேண்டும் என்பது வாழ்க்கைக்குத் திறவுகோல் போல் கண்ணன் வழி இதுவேயாகும்.

வலிவு படைத்தவனே வாழ்வுக்குரியவன் என்பது கீதையின் கோட்பாடு. இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணையாவது வலிவு. வலிவு உயிரை வளர்க்கிறது. மெலிவு உயிரைத் தேய்க்கிறது. வலிவு நோயை நீக்குகிறது. மெலிவு நோயை வளர்க்கிறது. வலிவு நல்லறத்தையும் நேர்மையையும் நல்குகிறது. மெலிவு மனக் கோணங்களையும் ஒழுக்கமின்மையையும் உண்டு பண்ணுகிறது. ஆத்ம போதத்தைப் பெருக்குவது வலிவு; பிரபஞ்ச உணர்ச்சியை ஊட்டுவது மெலிவு. பந்தத்தை மிகைப்படுத்துவது மெலிவு; மோட்சத்தை வழங்குவது வலிவு.

பகவத்கீதா உபநிடதம்:-

உபநிடதங்கள் எல்லாம் நான்கு வேதங்களினின்று வந்தவையே. பகவத்கீதையோ மகாபாரதத்தினின்று வந்தது. ஆயினும் இது உபநிடதம் என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் எல்லா உபநிடதங்களின் சாரம் இதில் இருக்கிறது. உபநிடதங்களையெல்லாம் பசு என்று வைத்துக் கொண்டால் பகவத்கீதையை அவை தரும் பால் என்று பகரலாம். பசுக்கள் விதவிதமான நிறமுடையவைகளாக இருக்கின்றன ஆனால் அவைகளினின்று வரும் பால் வெண்மையானது. பசுவை எல்லோராலும் வளர்க்க முடியாது. அதினின்று பால் கறப்பதும் துன்பமானது. பாலை அருந்துவது எல்லார்க்கும் இயலும். பாலினின்றும் தயிர், வெண்ணெய், நெய் முதலியவற்றைச் செய்து கொள்ளலாம். அங்ஙனம் கீதா சாஸ்திரத்தை இகபர மிரண்டுக்கும் ஏற்ற நல்ல வழிகாட்டியாக வைத்துக் கொள்ளலாம். போகுமிடத்துக்கெல்லாம் பசுவைக்கொண்டு போக முடியாது. பாலை எங்கு வேண்டுமானாலும் பாதுகாத்து எடுத்துச் செல்லலாம். அதாவது கீதையை நன்றாக அறிந்து கொண்டவர்கள் பிறகு உபநிடதங்களில் அடங்கியிருக்கும் கோட்பாடு யாது என்று கவலைப்பட வேண்டியதில்லை. எல்லார்க்கும் எளிதில் விளங்காத உபநிடதங்களை விளங்கும்படி செய்து வைத்தவன் கண்ணன். அதற்குக் கருவியாக அமைந்தவன் அர்ச்சுனன். கன்றுக்காகப் பசு பால் சுரக்கிறது. பின்பு அது உலகுக்கும் பயன்படுகிறது. கீதையும் அங்ஙனம் உலகுக்குப் பயன்படுவதாயிற்று. செரிமானத்திற்கு ஏற்ற அளவு பாலை அருந்தலாம். நோயாளிக்கும் உடல் நலமுள்ளவனுக்கு அது நல்லுணவு ஆகிறது. கீதையை அவரவர் பரிபக்குவத்துக்கு ஏற்ற அளவு பயன் பயன்படுத்தலாம். நல்வாழ்வை இன்று புதிதாகத் துவக்குகிற மனிதனுக்கும் அது பயன்படும். சாதனத்தில் மேலான நிலைக்கு வந்திருப்பவனுக்கும் அது பயன்படும். சாதனத்தில் மேலான நிலைக்கு வந்திருப்பவனுக்கும் அது பயன்படும். கீதையில் அடங்காத இகபர தத்துவம் ஒன்றுமில்லை.

பிரம்ம வித்தை:-

வித்தைகள் எண்ணிக்கையில் அடங்காதவைகள். புதிய புதிய இயற்பியல் ஞானங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன.

மனிதனுடைய அறிவு எல்லாத் துறையிலும் வெகுவேகமாக விரிவடைந்து கொண்டே போகிறது அதற்கிடையில் மற்றொரு பேருண்மையை மனிதன் உணர்கிறான். புதியதாகப் பெறுகிற இயற்கையின் ஞானம் ஒன்று, மனிதன் இன்னும் பெறவேண்டிய பகுதி பன்மடங்கு அதிகமாக இருக்கிறது என்பதை நினை-வூட்டுகிறது. கற்றது கைம்மண்ணளவு. கல்லாதது உலகளவு என்-பது எல்லோர்க்கும் உண்மை. பரந்த அறிவு வர வர மேலும் அறிய வேண்டியது அகண்டாகாரத்தில் விரிந்து ஓடிக் கொண்-டிருக்கிறது. இதை உணர்ந்த சான்றோர் கேள்வியொன்று கேட்-டனர். எதை அறிந்தால் அறிவு பூர்த்தியாகிறது? என்பதை அறிந்து கொண்டால் இயற்கையின் மர்மம் முழுவதும் விளங்கி-விடுகிறது? இந்த ஆழ்ந்த ஆராய்ச்சியில் அவர்கள் வெற்றியும் பெற்றனர். அனைத்துக்கும் முதற்காரணம் எது என்பதை அவரவர் அனுபூதியில் உணர்ந்தனர். மூல தத்துவத்தை அறிந்த பின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் விடை கிடைத்தது. மூலப் பொருள்-களைப் பற்றிய வித்தை பிரம்ம வித்தை என்று பெயர் பெற்றி-ருக்கிறது. வேறு பல பல பெயர்களைக் கொண்டு இதை அழைப்-பதுண்டு. அவைகளுள் பரவித்தை அல்லது பரஞானம் என்பது சர்வசாதாரணமானது சமயங்கள் தெய்வத்துக்குக் கொடுத்திருக்-கிற பெயரை இந்த ஞானத்துக்கும் கொடுத்து விடுவது இயல்பு. ஒரு உதாரணம். சிவஞானம் என்பதும் பரஞானம் என்பதும் வெவ்வேறு இயல்பு. பொருளுக்கும் விளக்கம் சொல்லுமிடத்து இவையாவும் ஒன்றையே குறிக்கின்றன. என்பது வெளியாகும். இந்த பிரம்ம வித்தையைப் புகட்டுவது கீதையின் நோக்கமாகும். அர்ச்சுனன் கேட்டது போர் புரிவதா, பின் வாங்குவதா என்பதாகும். அதற்கு இரண்டில் ஒன்றை இயம்புவதற்குப் பதிலாக பிரம்ம வித்தையை ஏன் பகவான் எடுத்துக் கொண்டார் என்ற கேள்வி பிறக்கக் கூடும். அப்போதைக்கப்போது உண்டாகும் ஐயங்களை அகற்றி வைப்பது ஒருவிதமான உதவியாகும். புதிய ஐயம் பிறப்பதற்கு இடமில்லாது ஐயங்கள் அனைத்தையும் அறவே அகற்றி வைக்க வைப்பது உயர்ந்த உபகாரமாகிறது. ஒரு சிவனுக்குக் கொடுக்கும் கொடைக்குள் முடிவானது பிரம்மசூரணம். ஜீவாத்மா அதை ஏற்க வல்லனாகும்போது பரமாத்மா அதை எடுத்து உவப்புடன் அளித்துவிடுகிறார்.

மற்றொன்றுக்கு முந்தியதுமன்று, பிந்தியதுமன்று, மேலானதுமன்று, கீழானதுமன்று என்று எடுத்துக்காட்டுவது அவரது சிறப்பியல்பு ஆகும். வாழ்க்கை என்றும் ரதத்துக்கு அவர் நான்கு யோகங்கள் என்றும் நான்கு குதிரைகளை பூட்டுகிறார். அவைகள் வெண் குதிரைகளாயிருப்பது அவைகளின் சாத்துவிக இயல்பையும் தூய்மையையும் விளக்குகிறது. ரதத்தை விரைந்து ஓட்டுதற்கு நான்கு குதிரைகளும் சேர்ந்து உழைக்க வேண்டும். அங்ஙனம் நான்கு யோகங்களும் ஒரே காலத்தில் பின்பற்றப்படும்பொழுது வாழ்க்கையின் லட்சியம் இனிது நிறைவேறுகிறது. நான்கு யோகங்களையும் சமரசமாக வழங்குகின்ற அப்பரம புருஷனுக்கு யோகேசுவரன் என்னும் பெயர் வந்துள்ளது.

கீதா சாத்திரத்தை ஸர்வகத சாஸ்திரம் UNIVERSAL SCRIPTURE என்றும் பொது நூல் என்றும் பகருதற்குத் தக்க காரணங்கள் உண்டு. முக்தி மார்க்கத்தைப் புகட்டும் சாத்திரங்களே யாவற்றிலும் மேலானவை. முக்தி அடைவதற்கு நிகரான பேறு மனிதனுக்கு இல்லை. இக்கோட்பாடு யாவருக்கும் ஒப்ப முடிந்தது. கீதா சாஸ்திரம் முக்தியைப் புகட்டுகிறது. வாழ்க்கையின் குறிக்கோள் முக்தி என்பதை அது நன்கு தெளிவுறுத்துகிறது

வாழ்க்கையின் குறி முக்தி. அதற்கு உற்ற நெறி யோகம். கர்மம் பக்தி, ஞானம் ஆகிய மூன்று யோகங்களும் முறையே கீதையில் இடம் பெறுகின்றன. இரண்டு சிறகுகளும் வாலும் இருப்பதால் பறவை பறக்கிறது. ஜீவன் பரத்தை அடைதற்கு ஞானமும் பக்தியும் சிறகுகளாக அமைகின்றன. கர்மயோகம் சமப்படுத்தும் வால் ஆகிறது. எல்லாச் சாதனங்களும் இம்மூன்றினுள் அடங்கிவிடுகின்றன. பரத்தை எண்ணி இகத்தை மறந்துவிடும்படி புகட்டும் நூல்கள் உண்டு. இகத்தில் கருத்து அனைத்தையும் வைத்து மேலாம் நிலையாகிய பரத்தைப் புறக்கணிக்கும்படி போதிக்கும் புல்லிய நூல்களும் உண்டு. ஆனால் பகவத்கீதையோ இகபரம் இரண்டிற்கும் உரிய இடத்தை முறையாக வகுத்து வழங்குகிறது. அவைகளுள் ஒன்று மற்றொன்றுக்கு முரண்பட்டதல்ல என்பதும் கீதையின் கோட்பாடாகும். இக வாழ்க்கையை நன்கு நடாத்துபவன் பரத்துக்கு உரியவன் ஆகிறான். பரத்தைச் சார்ந்திருக்க வல்லவன் இகத்துக்கு நன்கு பயன்படுகிறான் என்பது கீதையின் போதனையாகிறது.

மனிதனை நிறை மனிதன் ஆக்குவது கீதையின் கோட்பாடாகும். உறுதியாக உடலும் உயர்ந்த உள்ளமும் தெளிந்த அறிவும் இன்றியமையாதவைகளாகும். பேராற்றல் படைத்திருப்பது முதல் கோட்பாடு. ஒழுக்கம் ஆற்றலில் அடங்கிவிடுகிறது நலத்தைச் செய்யவும் செய்விக்கவும் ஆற்றல் உடையவனுக்கே சாலும். அடுத்த கோட்பாடானது அன்பு. உயிர்கள் அனைத்துக்கும் பொதுவானது. அன்பைத் தூய அன்பாக மாற்றியமைப்பது பக்தியோகத்தின் நோக்கமாகும். தூய அன்பினின்று இனிமை யாவும் தோன்றும். எல்லாவற்றையும் ஒன்றுபடுத்துவது தூயஅன்பு. உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் தூய அன்பு படைத்திருப்பவனுக்குச் சொந்தமாய் விடுகின்றன. இனி அறிவு மூன்றாவது கோட்பாடு ஆகும். பட்டப்பகலை உண்டு பண்ணும் ஞாயிறு போன்றது அறிவு அனைத்தையும் அது விளக்குகிறது. மாண்புகளையெல்லாம் அது எடுத்துக்காட்டவல்லது. உயிர்களைச் செயலில் ஏவுவதும் அறிவு. தொடுத்த கர்மத்தைக் குற்றம் குறையின்றிச் செய்து முடிப்பதற்கு வழிகாட்டுவதும் அறிவு. அதைப்பாங்குடன் வளர்க்க மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். ஆக, ஆற்றலையும் அன்பையும் அறிவையும் ஒருங்கே அடையப் பெற்றவனுக்கே மேலும் பெற வேண்டிய பேறு ஒன்றுமில்லை. நிறை மனிதன் ஆக விரும்புவோர் அனைவர்க்கும் ஸ்ரீமத் பகவத் கீதை பொது நூலாகும். சமயங்கள் அனைத்தும் அதைப் பொது நூலாக வைத்துக் கொள்வதும் சாத்தியமாகிறது.

ஸர்வோ பநிஷதோ காவோ
தோந்தா கோபால நந்தன:
பார்த்தோவத்ஸ ஸுதீர்போக்தா
துக்தம் கீதாம்ருதம் மஹத்.

## திப்பு சுல்தானின் இசை நாற்காலி

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் வெள்ளையரை இந்திய மண்ணில் வேரூன்ற விடாமல் தடுத்த பெருமை திப்பு சுல்தானைச் சாரும். மைசூரைத் தலைநகராக வைத்து தென்னகத்தின் ஒரு பகுதியை ஆண்ட இந்த மாவீரன் புலியினைத் தனது சின்னமாகக் கொண்டிருந்தான். ஆங்கிலேயரிடம் இவனுக்கிருந்த வெறுப்பும் ஆத்திரமும் அளவிடற்கரியன. இதற்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம் 1795-ஆம் ஆண்டில் திப்பு சுல்தான் பிரெஞ்சு நாட்டுத் தச்சன் ஒருவனை அழைத்து அரசன் அமரத்தகுவதாய ஒரு நாற்காலியைச் செய்யுமாறு உத்தரவு கொடுத்தான். திப்புவின் திட்டப்படி உருவாக்கப்பட்ட அந்த நாற்காலி ஐந்து அடி நீளமும், இரண்டரை அடி உயரமும், இரண்டடி அகலமும் கொண்டதாகும். முறைப்படி அதனை இயக்கும்போது, புலியின் தோற்றம் கொண்ட அந்த நாற்காலி புலி உருமுவது போன்ற ஒலியினை எழுப்பும். அது மட்டுமல்ல. அந்த ஒலியோடு கூட, நாற்காலியின் கீழ்புறத்தில் படுத்துக்கிடப்பதே போன்ற ஆங்கிலேயனின் கைகள் புலியினைக் கையால் தடுப்பது போன்றும் அவன் நசுக்கப்படுவது போன்றும் அந்த இருக்கை இயங்கும் தன்மையது. ராக மஹால் என்னும் பெரிய அரசவையில் அந்த இருக்கையில் அமர்ந்து அதனை இயக்குவது திப்புவுக்கு வழக்கமாக இருந்ததாம். இந்தியாவின் ஆளுநராக இருந்த வெல்லஸ்லி காலத்தில் திப்புவின் மிகப்பெரிய நகரமாகிய சீரங்கப்பட்டணம் ஆங்கிலேயர் வயப்பட்டது. புலியின் அமைப்புக் கொண்ட இசை நாற்காலியும், ஏராளமான பொன்னும் பொருளும் வெள்ளையரால் கொள்ளையடிக்கப்பட்டன. ஆளுநர் வெல்லஸ்லி கொள்ளையடித்த பொருள்களையெல்லாம் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் ஒப்படைத்தான். இசை நாற்காலி இறுதியாக லண்டனில் இருக்கும் விக்டோரிய ஆல்பர்ட் காட்சிச் சாலையில் பார்வைப் பொருளாக வைக்கப்பட்டது. ஜான்கீட்ஸ் என்னும் ஆங்கிலக் கவிஞனும் இந்த இசை நாற்காலியைக் கண்டு வியந்ததாகக் காட்சிச் சாலையின் குறிப்பில் காணப்படுகிறது.

## அன்னை இந்திரா

1) கார்மேகம் சூழ்ந்திருண்டு
கறுத்திருக்கும் வானமொப்பப்
போர் மேகம் சூழ்ந்து வந்து
பூவுலகம் பொசுங்கிடாது
பார் முழுதும் வெண் புறவாய்ப்
பறந்து வந்த அன்னையுன்னைப்
ஊர் கலங்க வீழ்த்திவிட்டான் உன்மத்தன்!
உளம் நொந்து துடிக்கின்றோம் யாம்!

2) தாயகத்து மக்கள் ஈங்கு
தளர்வு நீங்கி வளமை எய்தி
அறிவு கொண்டு ஆற்றல் பெற்று
வறுமையின்றி வாழ எண்ணிச்
சொல்லாலும் செயலாலும் சோர்விலாது
பணிபுரிந்த
எல்லையிலா அன்புருவை
இனி எங்கு சென்று காண்போம்!

3) பூசல் கொண்டு போர் நிகழ்த்திப்
பூவுலகம் மாய்ந்திடாமல்
குறை கடிந்து நிறைமை எய்திக்
குவலயத்தோர் வாழ்கவென
அன்பு கொண்டு அருள் மலிந்து
ஐக்கிய நாடரங்கு தனில்
கொண்டல் போல் பொழிந்து வந்த
குரலை இனி என்று கேட்போம்?

பஞ்சைகளைக் காப்பார் யார்? பாய்ந்து வந்து நித்தமிங்கு
தஞ்சமென வந்தோரைத் தாயாகப் புரப்பவர் யார்?
அஞ்சேலென்றருள்காட்டும் அன்னையே நீயெமது
நெஞ்சிலே நிறைந்து விட்டாய்!
நின்னை இனித் தொடுவார் யார்?

— பழநி . அரங்கசாமி

# கட்டுரையாளர்கள் கவனிக்கவும்

i) இலக்கியம், இலக்கணம், வரலாறு, கல்வெட்டு, பொது அறிவு, தத்துவம், அறிவியல் தொடர்பான கட்டுரைகள், செய்திக் குறிப்புகள், மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள் ஆகியனவற்றை 'செந்தமிழ்' ஏற்றுக்கொள்ளும். ஒரு நூலைத்திறனாய்வு செய்யும் கட்டுரையினை விட படைப்புக்கட்டுரைக்கே முதலிடம் அளிக்கப்படும்.

ii) கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்.

iii) கட்டுரைகளும், கவிதைகளும் முழு வெள்ளைத் தாளின் ஒரு பக்கத்திலேயே தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். தட்டச்சு செய்து அனுப்பினால் நன்று.

iv) ஆய்வுக் கட்டுரைகளை அனுப்புவோர் இன்றியமையாத இடங்களில் மட்டும் அடிக்குறிப்பினைக் கொடுக்க வேண்டும்.

v) இதழின் இடவசதி கருதி கட்டுரையாளரின் கருத்துக்குப் பங்கமின்றி, கட்டுரையினை ஓரளவு மாற்றுவதும், குறைப்பதும் செந்தமிழின் உரிமையாகும்.

vi) தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் இதழில் வெளியாவதற்கு முன்னமேயே கட்டுரையாளருக்குச் செய்தி அனுப்பப்படும்.

vii) வெளியிடப் பெறாத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய அஞ்சல் தலை வைத்து அனுப்பவேண்டுகிறோம்.

viii) கட்டுரை, கவிதைகளைக் கீழ்க்காணும் முகவரிக்கும் அனுப்பலாம்.

*பழநி. அரங்கசாமி*

234, பெரியார் தெரு
நாகமலை புதுக்கோட்டை மதுரை-625019.

## நூல் மதிப்புரை :

i) தமிழ் இலக்கியம் சொல்லும் கதைகள் (ரூ-25 )

—மு. அருணாசலம்

ii) சரளா்தாசர் — கிருஷ்ண சந்திர பாணிகிராகி (ரூ-4)

தமிழில் — தே. ஆண்டியப்பன்

வெளியீடு ; சாகித்திய அக்காதெமி
தென்னகக் கிளை அலுவலகம்
29, எல்டாம்ஸ் சாலை
சென்னை—18

சொல்லும் கதைகள்

i) தமிழ் இலக்கியம் ஏழு பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சங்க நூற்கதைகள், காப்பியக்கதைகள் திருமால் அடியார்கதைகள், திருவிளையாடற்புராணக்கதைகள், புலவர் கதைகள், அம்மானைப் பாடற்கதைகள் என்ற தலைப்புகளின்கீழ் எழுபத்தொரு கதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. தமிழிலக்கியத்தில் புதைந்து இடக்கும் பல்வேறு பட்ட கதைகளோடு செவி வழிச் செய்தியாக பரவியுள்ள கதைகளும் இடம் பெற்றுள்ளன. தமிழிலக்கியத்தில் மேலோட்டமானபயிற்சியாவது வேண்டும் என விழைவோர் புதுமை யான இத்தொகுப்பில் உள்ள கதைகளை முழுதும் பயின்றால் போதுமானது. ஆயினும் வள்ளுவர் வாசுகி கதையினை இலக்கியத் கதை அல்ல என்று முன்னுரையில் குறிப்பிட்டு விட்டு, இத்தொகுப் பில், அதுவும் சங்க இலக்கியக் கதைகளோடு சேர்த்தமை பொருத்த முடையதாகத் தோன்றவில்லை. அது மட்டுமன்று, தமிழுக்கு மட்டுமே உரிய கதைப்பகுதிகளைத்தான் இந் நூலில் கூறுகிறேன். என்று கூறி, சைன புராணக் கதைகளை இணைத்தும் ஏனோ என்று தெரிந்திலது. இம்மாதிரி உரைநடையாக வரும் நூல்களில் மூல நூலின் இன்றியமையாத பாடற்பகுதிகளை மட்டும் ஓரிரு இடங்களில் மேற்கோளாகக் காட்டுவது உண்டு. முதல் நூலினைப் படிப்பதற்குத் தூண்டுதலாக அமையும் என்பதோடு, மிகச் சிறந்த பாடல்களை யாவது கதையின் போக்கோடு சுவைப்பதற்கு வாய்ப்பு இருக்கும். இந்நூல் அச்சிறந்த மரபினை ஒதுக்கிவிட்டது. இருப்பினும் ஆற்றொழுக்குப் போன்ற நடை — கதைகள் சுருக்கமாகவும் எளி மையாகவும் உள்ளன. வாலாமை, ததியோதனம், ஆனந்த பாஷ்பம் போன்ற வழக்கிறந்த சொற்களைத் தவிர்த்து நல்ல தமிழ்ச்சொற் களைப் பெய்திருக்கலாம். இலக்கியத்தின் பிரதிபலிப்பாக விளங்கும் இந்நூலினைப் போன்று மேலும் பல நூல்கள் வெளிவருவது நன்று,

ii) ஒரிய மொழியின் மிகச் சிறந்த புலவரான சரளா-தாசர் புராணங்களும், கவிதைகளும் எழுதிப் புகழ் பெற்றவர். பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்த இந்த ஒரிய இலக்கியச் சிற்பி அந்நாளில் ஒரியப்பகுதியை ஆண்ட கஜபதி மன்னனிடமிருந்து பத்து கிராமங்களைத் தானமாகப் பெற்றார் என்கிறது வரலாறு. வட மொழியிலிருந்த மகாபாரதத்தை தழுவி ஒரிய மொழியில் அப்பெருங்காவியத்தைப் படைத்த இம்மாமேதை சுய அறிவும், ஓயாத உழைப்புக்கும் மூல காரணம், தான் வணங்கும் சரளாதேவியின் கருணையே என்று நம்பினார். இவரது மகாபாரதம் மூல நூலினின்று விலகிச் செல்கிறது. என்றாலும் ஒரிய மொழியில் மட்டும் அதனைப்பயில்வோர் காப்பியத்தின் நடையழகினையும், பொருட் பொதிவினையும் கண்டு பெருமிதம் கொள்வர். இந் நூலேயன்றி சரளாதாசரின் கீதகோவிந்தம, பாகவத புராணம், பரத சாவித்ரிபோன்ற நூல்கள் இக்கவிஞரின் வடமொழித் தொடர்பினைத் தெளிவாக விளக்குவனவாகும்

ஒப்பிலக்கியம் பரவலாகப் பேசப்படுகின்ற இக்கால கட்டத்தில் ஒரிய மொழியின் தலைசிறந்த காப்பியக் கவிஞனைப்பற்றிய இந் நூல் தமிழ்மாணவர்க்குப் பயன் விளைப்பதாகும், இந்தியாவின் கலை இலக்கியப் பெட்டகங்களை மொழி வேறுபாடின்றிப் பல்வேறு இந்திய மொழிகளிலும் பெயர்த்தெழுதி வெளியிடும் சாகித்ய அகாதெமியின் தொண்டு பெரிதும் பாராட்டப்படத்தக்கதாகும்.

iii) நூல் : கிரேக்க இலக்கிய வகைமை ஒப்பாய்வு

— கி, இராசா ரூ.15

விற்பனை உரிமை: சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழம் சென்னை- 108

இலக்கியப்படைப்பாளர்கள் தமது கருத்தை பாடல், கவிதை நாடகம் சிறுகதை, நாவல் போன்ற பல்வேறு இலக்கிய வகைகளில் வெளிப் படுத்துகின்றனர். இந்த இலக்கியவகைகள் (genre) படைப்பாளர் களின் மனப்பக்குவத்திற்கேற்பவும், கால மாறுபாட்டுக் கேற்பவும் விரிந்து பரந்து வளர்கின்றன. புதுவதாக வந்துள்ள இலக்கிய வகைமைக்கு புதுக்கவிதையை ஒரு சான்றாகக் காட்டலாம். இலக்கிய வழக்கில் முற்காலத்தில் இருந்த சிற்சில வகைகள் இற்றைநாட்களில் அருகி மறைந்து விடுகின்றன. முற்காலத்தே செய்யுள் வடிவில் இருந்த இலக்கிய வகைமைகளைப் பற்றிய விளக்கத்தினை இலக்கண விளக்கப் பாட்டியல் நவநீதப் பாட்டியல், போன்ற நூற்கள் பல படப்பேசுகின்றன. தொண்ணூற்றாறு வகைபிரபந்தங்கள் எனப்படும்

சொல் வழக்கு இருக்கிறதே தவிர. உலா தூது, பரணி, காதல் கலம்பகம் போன்றவைகளைத்தவிர வேறுபிரபந்த வகைகள் இல்லை. இவற்றிலும் காதல், உலா போன்ற வகைமையில் இலக்கியம் படைப்பாரில்லை. இது தமிழில் உள்ள நிலைமை. இதனை மன திற்கொண்டு கிரேக்க மொழியில் உள்ள இலக்கிய வகைமை பற்றி இந்நூல் பேசுகிறது. கிரேக்கத்தில் காணும் இலக்கிய வகைமை பற்றி ஆங்கிலத்தில் உள்ள நூல்களின் துணை கொண்டே இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. துன்பியல், இன்பியல் போன்ற நாடகப்பிரிவுகள் பாடலில் கையறு நிலை போன்றவை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டி லேயே கிரேக்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இத்தகு கிரேக்க இலக்கிய வகைமைகளைப் பற்றிப் பேசுமபோது அவை வளர்ந்த பின்னணியையும், அவற்றை வளர்த்த ஆசிரியர்களைப்பற்றியும் கூறுவதோடு ஆங்காங்கே இயன்ற அளவில் தமிழிலக்கிய வகைமை களோடு ஒப்பிட்டுக் காட்டுவது இந்நூலின் தனிச்சிறப்பு. சங்க இலக்கியக்கற்பனைகள் நலஞ்சார்ந்தவை என்பதும் கிரேக்கக் கற்பனைகள் பௌராணிகத்தன்மை மிகுந்தவை என்பதும் தெளி வாகக்காணப்படுகிறது ஆங்காங்கே கிரேக்கமொழி ஆசிரியர் களுக்கு உரியதாகக் கூறப்படும் பாடற்பகுதிகளை ஆசிரியர் நல்ல தமிழில் பெயர்த்துள்ளார். நூலாசிரியரின் கவிதை மாண்புக்கு அவை சான்றுகளாக உள்ளன. இருப்பினும் (Ode) என்னும் கிரேக்கப்பா வினை ஒரிடத்தில் போற்றிப்பா என்றும் பிறிதோரிடத்தில் துள்ளற் கலிப்பா எனவும் கூறுவது பொருத்தமில்லை. கையறு நிலை என்ற சொல் வழக்கிலிருக்கும்போது எலிஜியக்கவிதை என்று எழுத வேண்டியது இல்லை. அச்சுப்பிழை உள்ளிட்ட சிற்சில குறைகள் இருப்பினும், ஒப்பிலக்கியம் பயில விருப்புவார்க்கு இந்த நூல் துணைபுரியக் கூடும் என்பதில் ஐயமில்லை.